22nd September 1958]

### *Block Development Scheme, Kilvalur*

*406 *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா, நாகை தாலுகா, கீவலூர் வட்டார அபிவிருத்தி எல்லைக்குக் கட்டுப்பட்ட கிராமங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளில் எத்தனை ஹரிஜன தெருக்கள் இணைக்கப்பட்டுள்ளன ?

(இ) மேற்படி வட்டார அபிவிருத்திக்கு 1957–58-ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(ஈ) இதுவரை செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) 71.

(*b*) 189.

(*c*) Rs. 2,64,380.

(*d*) Rs. 2,37,679 in 1957–58.

### *Loans from the Centre*

*407 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. Sarathi) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யம் மத்ய சர்க்கார் கடனுக்காகச் செலுத்தவேண்டிய வட்டியை வரும் ஆண்டுகளில் குறைக்கவோ தள்ளுபடி செய்யவோ கோரப்பட்டுள்ளதா ?

(ஆ) மத்ய சர்க்கார் இது பற்றி ஏதாவது பதில் கொடுத்துள்ளார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Yes.

The Government of India have liberalised the rates of interest on certain loans due to them with effect from 1958–59. The revision of the rates of interest decided upon by the Government of India is expected to result in a saving of about Rs. 50 lakhs per annum with effect from 1958–59.

SRI A. A. RASHEED : Have the Government made any representation to the Union Government for the waiver of the loan itself?

THE HON. SRI C. SUBRAMANIAM : We have to receive further loans from them. If we raise this question of waiver of loan at this stage, perhaps no future loans may be available.

SRI P. U. SHANMUGAM : இந்த மன்றத்திலே நிதி நிலை அறிக்கையைப் படிக்கும்பொழுது, கனம் நிதி அமைச்சர் அவர்கள், நிதிக் கமிஷன் சிபார்சு செய்ததை மத்திய சர்க்கார் ஒப்புக்கொள்ளவில்லை என்று சொன்னார்களே, இப்பொழுது இந்த சிபார்சை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நிதிக் கமிஷன் சிபார்சு முழுவதையும் ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு சிறு பகுதியை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.